ஏப்ரல் 14, 2008, நியூயோர்க் நேரம் (கிழக்கு) மு.ப.11:00 வரை
இடைநிறுத்தப்பட்டுள்ளது

WATCH LIST ON CHILDREN AND ARMED CONFLICT

# இலங்கையில் ஆயுத மோதல் உக்கிரமடைந்துள்ளது சிறார்கள் மிக அவசரமான சிக்கலுக்கு முகம்கொடுத்துள்ளனர்


**தொடர்புகொள்க:** ஜுலியா பிறீட்சன் (நியூயோர்க்)
+212-551-2743 or +917-804-9114 (கைத் தொலைபேசி)
ஈமெயில்: juliaf@womenscommission.org
வேண்டுகோள்களுக்கேற்ப நிபுணர்ளை நேர்காணல் செய்ய ஒழுங்குகள் செய்யப்படும்


**ஏப்ரல் 14, 2008, நியூயோர்க்** - இலங்கையில் கொடிய ஆயுத மோதல் உக்கிரமடைந்திருப்பதன் காரணமாக நிட்சயமாக அங்கு சிறார்களுக்கு எவ்விதமான பாதுகாப்பும் கிடையாது. தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ.), அரசாங்கப் படைகள் மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் (டி.எம்.வீ.பி.)யின் இராணுவப் பிரிவினர் போன்ற இராணுவத் துணைப் படைகளினால் நாளாந்தம் சிறார்களுக்கு எதிராக மிக மோசமான குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எல்.டி.டி.ஈ. அமைப்பும் டீ.எம்.வீ.பி. யினரும் சிறார்களை தமது இராணுவப் படைகளுக்காக பிடித்துச்சென்று பயன்படுத்துகின்ற அதேவேளை, அரசாங்கமானது யுத்தம் நிகழும் பிரதேசங்களில் வாழும் ஆயிரக்கணக்கான சிறார்களுக்கு அவசரமாக தேவைப்படும் உதவிகளை வழங்க மறுப்பதுடன் அவர்களுக்கு அவசியாமான மனிதாபிமான தலையீடுகளையும் தடுத்து வருவதோடு, அவர்கள் முகம்கொடுத்துள்ள மோசமான நிலைமையையும் மூடி மறைத்து வருவதாக, ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பான வொச்லிஸ்ட் அமைப்பு புதிதாக வெளியிட்டுள்ள, *பாதுகாப்பு மில்லை தப்பவும் வழியில்லை: இலங்கையில் உக்கிரமடையும் ஆயுத மோதல்களும் சிறார்களும்*, என்னும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்த நிலைமைகள் உக்கிரமடையலாம் என அஞ்சக்கூடிய வகையில் பாரிய படை நகர்வுகள் நிகழ்து கொண்டிருக்கும் பின்னணியிலேயே, *பாதுகாப்புமில்லை தப்பவும் வழியில்லை* என்னும் அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயத்தில் இன்று வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, ஆயிரக்கணக்கான சிறார்கள் பாடசாலைகளுக்கு

செல்லமுடியாத நிலைமையும், மிக அடிப்படையான மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்ட நிலைமையும், கடத்தல்கள், கண்மூடித்தனமான கைதுகள், சட்ட விரோதப் படுகொலைகள், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், கண்ணி வெடித் தாக்குதல்கள், பலாத்கார ஆட்சேர்ப்புக்கள் போன்றவற்றினால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலைமையும் தோன்றியுள்ளது.

“இது பொது மக்களுக்கு எதிரானதொரு யுத்தமாக மாறியுள்ளதுடன் சிறார்களே இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்,” என, நியூயோர்கை மையமாகக் கொண்டுள்ள சர்வதேச ரீதியான அரசசார்பற்ற அமைப்புக்களின் வலைப்பின்னல் அமைப்பான, ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பான வொச்லிஸ்ட் அமைப்பின் பணிப்பாளர் ஜுலியா பிறீட்சன் (Julia Freedson) தெரிவித்தார். “இச் சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக மொத்த ஐ.நா. அமைப்புக்கும், குறிப்பாக பாதுகாப்புச் சபைக்கும் ஒரு கடமைப்பாடு உண்டு என்பதாலேயே நாம் இன்று இங்கு வந்திருக்கிறோம், இனிமேல் சிறிதளவும் காலம் தாழ்த்த முடியாது” எனவும் அவர் மேலும் தெரிவித்தார். சிறார்களின் பாதுகாப்புத் தொடர்பான சர்வதேச தராதரங்களை கடைப்பிடிக்கும்படி எல்.டி.டி.ஈ , அரசாங்கம் மற்றும் டீ.எம்.வீ.பி. ஆகியோர் மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையானது கடுமையான அழுத்தங்களை இட வேண்டுமெனவும், *பாதுகாப்புமில்லை தப்பவும் வழியில்லை* என்னும் அறிக்கையானது கோரிக்கை விடுக்கின்றது.

“இலங்கைச் சிறார்கள் தப்புவதற்கு வழியேயில்லை. அவர்கள் தமது குடும்பங்களில் இருந்து பலாத்காரமாக பிரிக்கப்படுவதோடு அவர்களின் வீடுகள் மற்றும் பாடசாலைகளிலிருந்தும் அகற்றப்பட்டு சிறார் போராளிகளாக ஆக்கப்படக்கூடியதற்கான யதார்த்தம் பெரும்பாலும் நிலவுவதும், தொடர்ச்சியாக அச்சம் தரக்கூடியதுமான சூழலுக்குள்ளேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இச் சிறார்களின் வாழ்க்கை இவ்வாறு சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் சர்வதேச சமூகமானது பாராமுகமாக இருக்க முடியும், என்று நான் வினவுகிறேன்.” என, இலங்கையில் கொள்கைகள் தொடர்பான புலமை சார் அமைப்பான, மாற்று கொள்கைகளுக்கான மையத்தின் (Center for Policy Alternatives) சிரேஸ்ட ஆய்வாளர் பவானி பொன்சேகா கேள்வியெழுப்பினார். “இந்த கொடிய முரன்பாட்டை நான் நேரடியாகக் கண்ணுற்றுள்ளேன், ஐ.நா. தனது செல்வாக்கு மற்றும் வளங்கள் அனைத்தையும் பிரயோகித்து இம் முரன்பாடு தீர்க்கப்படுவதற்கு உதவ வேண்டுமென ஒரு இலங்கையர் என்ற வகையில் நான் இரங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.”

ஆயுத மோதல் நிகழும் ஒரு சூழ்நிலையில் இலங்கைச் சிறார்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பல்வேறு தரத்திலான வன்முறைகளை *பாதுகாப்புமில்லை தப்பவும் வழியில்லை* என்னும் அறிக்கையானது விபரமாக வெளியிட்டிருப்பதோடு, இலங்கை அரசாங்கம், எல்டி.டி.ஈ. , டீ.எம்.வீ.பி. , ஐ.நா. பாதுகாப்புச் சபை, இலங்கையில் உள்ள மனிதாபிமான

அமைப்புக்கள், நிதி வழங்குனர்கள் மற்றும் ஏனைய அரசாங்கங்கள் என்பவற்றுக்கும் நடைமுறைச் சாத்தியமான பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

முழுமையான அறிக்கையை பெறுவதற்கு www.watchlist.org. பார்வையிடுக.

# # #